ஸ்ரீ

வில்லிபுத்தூர்

திருவேங்கடையர்செய்த

உவமாநசங்கிரகமும்,

புகழேந்திப்புலவர்செய்த

இரத்திநச்சுருக்கமும்.

இஃது,

பாக்குபேட்டை

மதுரை முதலியாரால்

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளை

யவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

துந்துபி ஹு ஆவணி மீ.

உவமாந சங்கிரகம்.

காப்பு.

வேதத்தமிழ்மாறன் வெற்பனையார்கேசாதி ※
பாதத்துவமாநப் ப்ண்பெல்லாந் - தாதின் .... ※
முருகூர்மலர்க்குழலாய் மூதுரையாற்சொல்வன் ※
குருகூரனைத்தொழுது கொண்டு .... ※

கூந்தற்கும்-நெற்றிக்கும்.

கொண்டலுங்கூந்தற்பனையுங் கொன்றைக்காயு
ம்மிருளுந், தண்டலையுங் கார்மணலுஞ் சைவலமு
ம், வண்டினமுந், தண்குழலை யொப்பாந் தனிவா
ணுதற்குநிகர்- வெண்பிறையுஞ் செஞ்சிலையுமே.()

புருவத்திற்கும் - கண்ணிற்கும்.

மேவிற்புருவம் விழிக்குவண்டுந் தாமரையும் ※
காவியுங்கூற்றம்புங் கருவிளையு - மாவடுவும், வே
லுங்கட்லும் விடமுமமுதம்வாளுஞ் - சேலும்பி
ணையுமிணைசெப்பு. (௨)

முகத்திற்கும்-காதிற்கும்-கபோலத்திற்கும்-மூக்கிற்கும்.

செப்புமுகங்கமலந் திங்கள்காதிற்குவள்ளை ※
பொப்பரியகத்தரிகையூசலா - மப்புநிலை, கண்ணு

டிசாணைகபோலங்குமிழ்சாதி - யெண்ணுசிகைக்கு வமையே. (௩)

இதழ்க்கும் - வாய்க்கும் - பல்லிற்கும்-
கழுத்திற்கும்.

எய்கிடைகோபந் துப்பிலவுமுருக்கிதழாம்,...*
வாய்குமுதம்விழி தொண்டை வாரிசமாந் - தோய்
கமுமுண், முத்துத்தளவ முருந்தெயிறுங்கந்தரத்
தை-நத்துக்கமுகெனவே நாட்டு. (௪)

மொழிக்கும்.

நாட்டுங்கதலி நடுக்கரும்புமாவருக்கை - காட்டு
ங்குயில்கிள்ளை கற்கண்டு - வேட்டருந் துஞ், சீனிச
ருக்கரை செந்தேனமுதம் பால்குழல்யா-ழர்னப
தினன்குமொழிக்காம். (௫)

தோளிற்கும்-முன்கைக்கும் - அங்கைக்கும்-
கைவிரற்கும்-கைந்நகத்திற்கும்.

காம்புகழை தோளிணைமுன் கைமகரயாழாகு
ந், தேம்பதுமமாந்தளிர்பூஞ் செங்காந்தள்-யாம்பு
கல்வோ, மங்கைவிரல்கெளிருமவ்விரலின்கூருகிர்
க்குப் - பைங்கிளிமூக்கென்றுவமிப்பாம். (௬)

கொங்கைக்கும்-அக்கொங்கைக்கண்ணிற்கும்-
உதரத்திற்கும்-உந்திக்கும்-
மடிப்பிற்கும்.

பாங்கரும்புகுதகிண்ணம் பைங்குரும்பைசெ
ப்புமுடி-கோங்கரும்புதாளங்குமிழிசிமிழ்-பூங்கம்

லம், பம்பரம்வெற்பிளை நீர்பந்துசகோரங்கலசங்-
கும்பமருப்பியானைகுடம். (௭)

குடமுதனலைந்துமணிக் கொங்கைகண் ணீலம்-
வடமுதரமுந்திமகிழம்பூ - படர்சுழியா, மேறும்
படியுமெறிநீர்த்தடந்திளையுங் - கூறும்படிமடிப்
புக்கொள். (௮)

உரோமக்கொடிக்கு.

கொண்டவுரோமக் கொடிக்கே யெறும்பொழு
க்கும்- வண்டொழுகுங்காஞ்சிமணிச் சுடருங்-கன்ன
டகர்காற், சங்கிலியும்வேழத் தறியுஞ்சலாகையுநீ
ள், பங்கயத்திளுளமும்வைப்பார். (௯)

இடைக்கு.

பாரிலிடைக்கரவும் பைங்கொடியும் பூங்கொம்
பு, மாரனுடம்பும்வகிரிழையு- நேர்கைப், பிடியள
வுந்தேய்ந்த பிறைக்கொழுந்துமின்னுந்- துடியள
வுங்கோளரியுஞ்சொல். (௰)

அல்குற்கும் - பெண்குறிக்கும்.

சொல்லியவல்குற்சுனையோடரசிலையுஞ் - சில்லி
யும்பொற் கொடிஞ்சித் தேர்த்தட்டும் - வல்லரவு,
மண்குறிக்குஞ்சிற்றால வட்டமும் பட்டமு மாம்-
பெண்குறிக்குமான்குளம்பைப்பேணு. (௰௧)

தொடைக்கு-முழங்காலிற்கும்-

கணைக்காலிற்கும்.

பேணுங்கதலி பிடிக்களிற் றின்கைக் துறங்காம்-

பூணுமுழந்தாளலவன் போலுமே-வேணுவுடன்,
சோகமுறுமம்புபெய் தூணியும்வராற்கன்றுங்-கா
ளமும்போன் றகணைக்கால். (யஉ)

பரட்டிற்கும்-குதிக்கும்-புறவடிக்கும்-
கால்விரற்கும்.

காலிற்பரடிரண்டுங் கைத்தராசொக்குமிரு - கா
லிற்குதிமதிக்குங் கந்துகமா - நூலெழுது, புத்த
கமாமை புறவடியொப்பாந்திரண்ட - வித்துரும
ம்போலும்விரல். (யங)

காலினகத்திற்கும் - காலிற்கும்.

விரற்பவளங்கூருகிர்க்கு வெண்பிறையு முத்து-
நிரைக்கழுநீர்ச் செவ்விதழு நேராம் - பரப்பியல்
கா,லஞ்சநறுந் தூவியனிச்சமசோகங்கமலம்-பஞ்
சிலவுமாந்தளிரொப்பாம். (யச)

நடைக்கும்-சாயற்கும்-மேனிக்கும்-
தேமலுக்கும்.

பாயற்பிடிவேழம்பைந்தூவி யன்னநடை - சா
யற்குமின்னமுதந் தான்மயிலாஞ் - சேயிழையா
ய், மாந்தளிர்பூஞ்சண்பகப்பூ மாமேனிபம்மேனி-
பூந்திதலைவேங்கைபசும்பொன். (யரு)

உவமானசங்கிரகம்
முற்றிற்று.

இரத்திநச் சுருக்கம்,

பிரிவாற்றாமைக்குரியகுறிகள்.

கலித்துறை.

சோறுந்துகிலும் வளைகலைநாணுந் துணிந்தும
ட, லூருந்தொழிலு மொளிசுடர்ப்பசலையு மோடரி
க்கண், ணீருங்கிழியும் பருமணற்கூடலு நின்றரற்
று, மூருந்தனியு மறைபோனநெஞ்சமு முண்டெ
ன்பரோ. (௧)

உண்ணாதுவள்ளத் தழுதழுமூசலுங் கந்துகமு,
நண்ணாவியல்பு நடுக்கமுஞ்சோபமு நாள்பலவு, ம
ண்ணாதமேனியும் வாராவுறக்கமு மாசுடையும், பு
ண்ணானநெஞ்சும் புகைதாழுயிர்ப்பும் பொரிமுத்
திமே. (௨)

பகை.

முத்துங்களபமுந் தண்பனிநீருமுயங்குமலர்ச்,
தொத்துங்குளிரியுந் தூய்மலர்ப்பாயலுஞ் சூழ்ந்
துபுறங், கத்துங்கடலுங் கதலியுமாலியுங் கங்குலு
மிப், பத்தும்பெரும்பகை யாய்விட்ட வாறொரு
பைந்தொடிக்கே. (௩)

நீக்கல்-வெண்பா.

தொடியும்பலகலனுந் தூய்சுச்சுமுத்துந் - கடி

கமழ்தாரும்புனையாள்கால - விடமனைய, செல்வி ழிக்குமையுந் திலத நுதற்குங்குறியாள் - சாலமுடி டாளளகந்தான். (௪)

தானேகழங்க மனைதண்சுனை நீராடாள் - கானே ரிசைபயிலாள்கைக்கிளியு-மானினமும், பூவையை யும்போற்றாள் பொருந்தவேபாங்கியருக்- கேவல் புரியாள்களிப்பதென்று. (௫)

துயர்க்கேது.

தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங்கோகி லத்துக் - கன்றிற்கமைக்காழிக்கம்புலிக்கு-நின்றர ற்று, மன்னைக்குமாரற் கயர்ந்தாளென்றன்னமே, யென்னைக்குமாரற்கியப்பு. (௬)

தூது.

இயம்புகின்றகாலத் தெகினமயில்கிள்ளை-பயம் பெறுமேசம்பூவைபாங்கி - நயந்தகுயில், பேதை நெஞ்சந்தென்றல்பிரமரமீனாந்துமே-தூதுரைத் துவாங்குந்தொடை. (௭)

மன்மதனுக்குரியமாலைமுதலியன.

தொடையிலஞ்சிமஞ்சளிளஞ் சோலைபடைவீ டு-படைமங்கையர்கமுகம்பாளையிடுகவரி- காளாஞ் சி,மல்லிகையாங்காரிகைபீர்மாரனுக்கு-வாளாமோ லைப்பூவுமால். (௮)

ஆலைக்கருப்பு சிலையைங்கணைபூ நாண் சுரும்பு- மாலைக்கிளி புரவிமாருதந்தேர்- வேலை, கடிமுரச

ங்கங்குல்களிறுகுயில்காளங் ....※
கொடிமகரந்திங்கள்குடை.................(௯)

மன்மதன்கணை.

குடைகவித்தநன்கஞ்சங் கோதறுசூதப்பூ.......※
கடியுமசோகந்தளவுகாவி - படையெடுத்து .... ※
வாங்காச்சமர்விளைக்கு மாரனுக்கெப்போது மங்
கை, நீங்காக்கணையாநினை ....(௰)

கணைச்செயல்.

நினைக்குமரவிந்த நீள்பசலைமாம்பூ....... ......※
வனைத்துணவுநீக்குமசோகு - வநத்திலுறு.....※
முல்லைகிடைகாட்டு மாதேமுழுநீலங்... ... ...※
கொல்லுமதனம்பின்குணம்............ ...(௰௧)

கண்ணினியல்பு.

குணமுங்கதமும் கொடுந்தொழிலுமன்பின் .... ※
கணமுங்குடியிருப்பார்க்காட்டு - மிணையாய்த்.. ※
துடிக்குஞ்சுழலுஞ் சுருட்டுமென்பருள்ளங் .. ...※
குடிக்குமநுராகவஞ்சங்கூர்ந்து...... ....(௰௨)

வஞ்சங்கொலைபோர் மதனுகமம்விரகந்..........※
துஞ்சுங்களவுசுகங்கலக - மஞ்சநமென்...... ...※
செம்மைவெளுப்புக்கறுப்புச் செவ்வரிநீலம்பெ
ருமை, வெம்மைமதர்ப்புக்கடைக்கண்வேல் (௰௩)

கண்ணிற்கிணை.

வேல்வாள்கணைவண்டு வேலைவிடமமுதஞ்......※

சேல்பங்கயங்குடங்கைசெங்காவி - கால்ன்...... *
வடுமான்கருவிளையை வண்சகோரத்தை ...... *
யடுமாங்குழையை யடர்ந்து.................(௧௪)

கொங்கையினியல்பு.

அடர்ந்துதிரண்டிடங்கொண்டண்ணுந்து விம்மிப்
படர்ந்துசுணங்குபரந்து - தடங்கொண் .... *
டிணைத்துத்த தும்பி யிறுமாந்துவிணை...... ...*
யணைத்துமுகம்பார்க்குமதுபார்........... (௧௫)

கொங்கைக்கணி பொருளும்இணையும்.

பார்த்தன்களபம் படீரப்புழுகுபனி...........*
நீர்குங்குமஞ்சாந்து நித்திலங்கச் - சாரவடங் ...*
கற்பகவல்லி கரும்புகருங்கண்மாழை... ......*
பொற்சிறுபுண்மாலை பொருப்பு...... ......(௧௬)

பொருப்பிளநீர் வெண்மகுடம் பொற்குடஞ்செ
ப்பியானை, மருப்புவநசஞ்சக்கிரவாகந் - திருக்கல
சங், கோங்கரும்புபந்து கொலைச்சூதுதாளமொக்
கு, ணீங்கியிராதேபுழுகுநெய்...............(௧௭)

கூந்தலினியல்பும் - அணிபொருளும்.

நெட்டுக்கருகிநெறித்துவிடும்பூமாலை ... ...*
வைத்துக்கடைசுழன்று வார்ந்தொழுகி - மொய்த்
தளிகள், சூழ்ந்துவடிவம்பலம்பித்துஞ்சடைத்தா
ழூட்டுபுகை, வாழ்ந்துதகரங்கமழுமால் ....(௧௮)

மாலைகழுநீர்முல்லை மல்லிகைசெவ்வந்திபிச்சி ...*
யேலம்வகுளமிலைத்தொடைதேன் - சாலநறும் *

புன்னைபசும்பாளை பொலிந்துபிடித்தடக்கை... ※
பின்னிவிட்டகூந்தலெனப்பேசு..... ....(௰௯)

கூந்தற்கிணை.

பேசுங்குழலைப் பிறங்குமுகிலென்று............ ※
மாசிலாநீலமணியென்றும் - வீசுமற... ... ...※
லென்றுமிருளென்று மெழிற்கவரிபாசிக்கொத் ※
தென்றுமுவமையியம்பு..... ....(௨௰)

மொழிக்கும் - அதரத்திற்கும்- பற்குமிணை.

இயம்புமொழிகிள்ளை யிரங்கிசையாழ்வீணை ... ※
வயங்குகருங்குயில்வண்பூவை - தயங்கினிய ... ※
பாகுகரும்பமுதம் பாகுதேன்மதுப்பழமென் .. ※
றருமதரம்பவளமாம்.......................(௨௧)

ஆமேபவளமரக் காம்பன்முருக்கிலவம் ... ...※
பூமெல்லிதழ்வீழிப்பொற்கனியாந் - தாமமணிக்
குல்லையருந்தொண்டை கொடித்துதளைகோப,..※
முல்லைமுருந்தெயிறுமுத்து.......... ......(௨௨)

முகத்திற்கும் - கழுத்திற்கும்.

இடைக்குமிணை.

முத்தார்முளரி முழுமதியமாந்திலதம்...... ...※
வைத்துநகைகாந்திமருவுமுக - நத்துடனே ... ※
பூகப்வரிக்கழுத்துப் பூங்கொடிமின் வாளிவஞ்சி※
மாகந்துடி நூன்மருங்கு......................(௨௩)

நுதற்கும்-வெயர்வைக்கும் - சொற்குமிணை.

மருங்கெ:சிபுமின்னேர்தம்.வாணுதலைவானத் ..※

தரும்புங்குழலிமதியாயும் - புரந்தரன்றன் ....*
வில்லெனவுமுத்தம்வெயர்வெனவுமேவிரும்பிற்.
சொல்லும்பாகுங்கரும்புஞ்சொல்...... ...(உச)

புருவத்திற்கும்-மூக்கிற்கும்-கபோலத்
திற்கும்-காதிற்குமிணை.

கரும்புருவம்வெண்பிறையுங் கைச்சிலையநாசி *
யரும்புகுமிழ்சண்பகமெட்பூவாம் - விரும்பியிடு
ந், தற்பணங்கபோலந் தனழகாதுகத்தரிகை...*
பொற்புவள்ளையூசல்புகல்.... .... (உரு)

கைக்கும்-நகத்திற்கும்-வாய்க்கும்-
நகைக்கும் - மெய்க்குமிணை.

புகலுகின்றசெங்காந்தள் புண்டரிகஞ்செங்கை *
யுகிருவமைகிள்ளை யொளிர்மூக்காம் - பகர்குமுத
ஞ், செய்யவாயொப்பாஞ்சிறந்தநகைவெண்ணில
வாம், மெய்ம்மாந்தளிரொன்பவே ....(உசா)

தோள்-வயிறு உந்தி-அல்குல்-தொ
டை-முழந்தாள்-கணைக்காலிற்குமிணை.

மேயிருதோளாலுதர மிக்கவுந்திநீர்ச்சுழியாஞ்.*
சேயமணியாலவட்டந்தேரரவு - தூயவல்குன்...*
மென்கதலியூருவிளங்குமுழந்தாளலவ... ......*
னன்கணைக்காற்றூவவராற்று.............. (உஎ)

புறவடிக்கும் - உள்ளடிக்கும்-குதிக்கு
மிணை.

நாடும்புறவடியே நன்கமைந்தபுத்தகமு........*
மோடுகின்றவாமையுறுப்புமாந் - தோடவிழுங்..*

கஞ்சமலருள்ளடியே கந்துகமாகுங்குதியே ...*
வஞ்சமறச்சொல்லுமருங்கு.................(உஅ)

மகளிர்விளையாட்டிற் குரியன.

மருங்குவளர்பூங்கா மலர்வாவிபூச...... ... ...*
திருந்துமணிச்செய்குன்றுதேமா - விரும்பமுத
பா நங்கிளிபூவை பந்துகழங்கன்னமயின்... ...*
மானமுல்லைப்பந்தர்வளர்ப்பு.......... ...(உகூ)

மின்னார்முன்றோன்றுமிசை.

வளர்க்குஞ்சிறுதூவி வண்டறுகாற்றும்பி... ..*
யளிக்குஞ்சுலவிஞிமிறார்ப்புங் - களிக்குஞ் ....*
சுரும்புமதுகரமுஞ் சூழ்விளரிப்பாட்டு........*
முருந்தெயிற்றுமின்னார்க்குமுன்..........(௩0)

தூதுக்குரியனவும் - பாணர்பெறுவனவும்.

கலித்துறை.

முன்னாகும்பூவைமுலையேறுதங்க முடிபுனாக்க
ப், பின்னாகுமன்றிற்பெரும்புகழ்ப்பாணன்பெறு
ம்பரிசில், பொன்னரணிகலம் பூமாதுரிமைவெம்
போர்க்களமா, றொன்னாரிடுதிறை வென்னிடுவார்
தமுறையிடமே.................... .... (௩க)

நவரசம்.

* இடமொன்றுமைக்கர் வீந்தமெய்ப் பாகத்
தெழிற்கிணையாத், திடமொன்றியவணச் சிங்கார
ம்வீரஞ்சிரிப்பருளே, யடமின்றியசினங்குர்ச்சை
யுஞ்சாந்தமுமற்புதமுங், கடியென்றுமொன்பது
மாநல்லிரதத்தைக்காட்டுதற்கே ....(௩உ)

பஞ்சவாசம்-பஞ்சசயநம்.

தற்கோலமேல மிலவங்கம்பாளிதஞ் சாதியங்காட்,
நற்கூறைநாற்ற மயிற்சேணம்பஞ்சணை நற்றுகி
லே, விற்கூறு தூவி தண்மீப்பாய்சயநம் விளங்கு
மைந்தாம், பொற்கோட்டலர்முல்லைப்பூவையன்கு
ரன்புபோர்த்தவர்க்கே................ ......(௫௩)

எண்வகைமணம்.

* கேட்பிரமம்பிர சாபத்தியத்தொடு கேண்
மையுறக், காட்டியவாரிடந் தெய்வம்புகழ்பெறு
காந்தருவ, நாட்டாசுரமுமிராக்கதநண் ணும்பைசா
சமென்றே, சாட்டுதலெண்மண மாகுந்தலையன்
புத்தந்திடவே......................... ......(௫௪)

முத்துபிறப்பிடம்.

தந்திவராகமருப்பிப்பிபூகந் தனிக்கதலி... ...*
நந்துசலஞ்சலமீன்றலைகொக்குநளிநமின்னார்...*
கந்தரஞ்சாலிகழைகன்னலாவின்பல்கட்செவிகா*
ரிந்துவுடும்புகரா முத்தமீனுமிருபதுமே... (௫௫)

செல்வமாதிருப்பிடம்.

வெண்பா.

* பதுமங்கொடிநகர்மின் பைந்துளவுவில்வங்
கதிர்விளைவுசங்குகடறீபம்- வதுவைமனை... ...*
நற்பரிபாற்பாண்டமிவை நாண்மலராணீங்காது*
நிற்பிடநல்லோர்நெஞ்சுமே......... .... (௫௬)

மதன்கணையெய்யுமியல்பு.

நெஞ்சிலரவிந்த நீள்சூதங்கொங்கையிலே......*
துஞ்சும்விழியிலசோகமாம்- வஞ்சியர்தன் ....*
சென்னியிலேமுல்லை திகழ்நீலமல்குலிலே......*
யன்னவேயெய்யுமியல்பாம் ....(௩௭)

வேணகர்க்கடையாளம்.

ஆமேகொடிவள்ளை யம்புயமுநெய்தற்பூ... ...*
பூமெசுரும்பு புனலாட்டுக்- காமவே............*
டென்றஹுறுமென்மறுகு தேராடன்மாடமதி...*
லன்றுநகருக்கடையாளம் ....(௩அ)

மின்னார்கைத்தொழில்.

* அம்பொற்றொடியணிமி ன்னார்தங்கைக்கைந் துதொழில் - செம்பவளமெல்விரலைச் சேர்த்தெ ண்ண-னம்பெழுதல், பூசித்திலைகிள்ளல் பூத்தொ டுத்தல்பண்ணெழில்யாழ் -வாசித்தலென்றுரைசெ ய்வார்.................. ....(௩௯)

பெண்களின்பருவம்.

வாரிமணிவெய்யோன் மதிபாரதம்வள்ளல்.......*
சீரியலறம்வளர்க்குஞ் செய்கைதா- னரிகேள் ..*
பேதைமுதலாகப் பேரிளம்பெண்ணீறாக......*
வீதெழுவர்தம்பருவமெண்......... ....(௪௰)

மகளிரான்மலர்மரம்.

கலித்துறை.

* எண்மாதவிசண்பகம் பாலைபுன்னை யெழிற் படலி, கொண்மாமகிழம மாவொடசோகுகுராமு

ல்லையின், பண்பாடனீழற் படனட்டலாடற்பழித் தலுண்ணற், கண்ணேறுக்குலைதயணைத்தற்சிரித்தற்க லர்க்காடுறுமே.................................(௪௧)

திணையும்-திணைக்குரியனவும்.

காடாகுமுல்லை கழிநெய்தலாகுங் கல்லாங்குறிஞ்சி, நாடாமருத நடலைவெப்பாலை யிந்நாட்டிற் றெய்வங், கோடார்கரன்வரு ணன்குகனிந்திரன் கூறுதுர்க்கை, மாடாயர்மீன்புல்லர் குன்றவர்கான வர்மள்ளருமே ....(௪௨)

அட்டபோகம்.

❋ மேவுமெண்போகம் விளம்பில் பெண்ணுடைவியன்கலன்பாற், றாவியற்போசநந்தாம்பூலம்வீசுசுயந்தமன்பி, றுவெழிற்பாட்டலர் வெல்லணையாமிவ்வநன்கமைத, ருவிக்கடவுளருட்பாழிப் பெற்றவர்சார்விடமே..................................(௪௩)

சிற்றின்பமும்-பேரின்பமும்.

விடமொன்றுமைக்கண்ணி வாட்டமுஞ் சோக மிகுவிரகுந், தடமென்றுருவளாச் சாற்றுதல் சிற்றின்பந்தன்செயலே, படுகின்றதுன்பப்பிறவியும்போக்கெனப்பண்புடனே,யிடமுன்றுணையெனக்கூறுதல்பேரின்பமென்பதுவே.........(௪௪)

ஐச்சுவரியம்-அ-உபசாரம்-௰௬.

பேறு-௰௬-ம்.

❋ வேண்டுநற்சுற்ற மிராசங்கமக்கள் பொன் மேவுமணி, யாண்டிடுந்தொண்டு நெல்வாகனமாழி

வையட்டசெல்வங், காண்டவிசிதல் கைகால்கழுநீ
ொடுமுக்குடிநீ, ராண்டளித்தேபுன லாட்டனல்
லாடையணிதல்பினே........................ ......(௪௫)

✻ பின்னுமுந்நூலளித்தேதேய்வைபூசற்பிரச
மலர், தன்னைப்புனைதனிசியரிதூவற்றரனறைமின்,
னென்னிகர்தீபங் கர்ப்பூரமிடலமுதேந்தல்கொட
ன், மன்னடைக்காய்மலர் மந்திரத்தர்ச்சித்தன் மா
ண்டொனலே .... (௪௬)

✻ என்னுமிவ்வீரொட்டுபசாரமாம் வலியேரிளை
மை, நன்மக்கணேயின்மை வாழ்நாட்புவிமின்ன
லனுகர்ச்சி, பொன்னறிவூக்க மிகுகல்விவெற்புக
ழ்பெருமை, நென்முதலீரொட்டுப் பேறுநற்புண்
ணியர்நேர்வனவே.... ... .(௪௭)

அறம்-௩௨.

✻ வண்ணான்புன்னாவிதன்;காதோலைசோலைமட
ந்தடம்வெண், சுண்ணம்பறவைப் பிணஞ்சுடற்றூ
ரியஞ் சோறளித்தல், கண்ணாடியாவிற் குரிஞ்சுகல்
வாயுறை கண்மருந்து, தண்ணீர்ப்பந்தறலைக் கெ
ண்ணெண்பெண்போகந்தரலையமே, ... (௪௮)

✻ மேதகுமர்துலர்க்குச்சாலை யேறுவிடுத்தல்
சலை, யோதுவர்க்குண்டி விலங்கிற்குணவோடியர்

பிணிநோய்க், கேதன்மருந்து சிறைச்சோறளித்த லியல்பிறரின், மாதுயர்காத்தனற் கந்நியர்தாநம் வழங்கலுமே .... (சக)

※ கற்றவறுசமையத் தார்க்குணவு கருதும்வி லே, யுற்றதளித்துயிர் மீட்டல்சிறுருக்கு தவனற் பான், மற்றுமகப்பெறு வித்தல்சிறுலை வளர்த்த லெனப், பெற்றவிவற்றினை யெண்ணுன்கறமென ப்பேசுவமே.. (ருய)

தசாங்கம்.

வரையாறுநாடு நகரூர்துரக மதகரியே, விரை யாருமாலே முரசம்பதாகை மெய்யாணையென்னு, முரையார்தசாங்கத்தி னுவ்வொன்றைநாடி யுறவ குத்தே, தரையாளுமன்னர் முதலாயெவருக்குஞ் சாற்றுகவே..,(ருக)

அட்டமங்கலம்.

சாற்றுங்கவரி நிறைகுடந்தோட்டி மூன்றற்ப ணமா, மேற்றியதீப முரசம்பதாகை யிணைக்கய லே, நாற்றிசைசூழ்புவி மீதட்டமங்கல நன்குறை யின், மேற்றிகழ்வேற்றடங் கட்செய்யவாய்ப்பை ம்பொன்னமைத்திருவே..(ருஉ)

ஆடவர்ச்சிறப்புவமை.

திருமான்முருக னளகேசனிந்திரன் சேன்முகி லே, பொருமாரன்வீமன் விசயன்மெய்க்கன்னன் புகழ்த்தருமன், வருமானசிவகன் மூவேழுவள்ளல்

வநசநிதி, தருமாமணிசங்கந் தேநுவைப்போலவுஞ்சாற்றுவதே.......................... (௫௩)

மடவார்ச்சிறப்புவமை.

* வதியுமின்னார் தமைப் பேசத் திருவுமைவாணிமதி, ரதியையும்பார்ப்பதி வாழுமற்றேனையரம்பையபனை, மதிதருமான்பிடி யன்னங்குயில் கிள்ளைமாடியிலைப், பொதி யவொப்பார்படை யாவாமீழின்மதன்போர்செய்யவே .... (௫௪)

சிவன்பெருமை.

போராடுவேளைவிழியழலேவிப்பொடிப்படுத்தி, நேரார்புரத்தைநகையாலெரித்துநிலாவணிந்து காராழிநஞ்சுண்டு தக்கன்றன்வேழ்விக் கடிந்தரக்கனோராத்தலைநெரித்தேசண்டன் வீழவுதைத்தனனே .... (௫௫)

உதிக்குங்கடவுட்கதிரோன்றன்பல்லை யறவுதிர்த்து, விதிக்குந்தலையைத் திருக்கித்தகர்வரும்வெங்கனற்கு, மதிக்குங்கரமறுத்திந்துவைத் தேய்த்துயர்வாணிதுண்டஞ், செதிக்கும்படித்தள்ளி யீமத்துட்டாண்டவஞ் செய்தனனே .... (௫௬)

தாண்டவஞ்செய்து தழலுருவாகித் தனையிடந்து, கீண்டவனுக்குந் தெரிவரிதாயள கேசனுக்கு, வேண்டியசங்க நிதிமுதலாக வியந்தளித்த, காண்

டசஞ்சோதி யெல்பார்க்கெய்து மேகலை மாதவ மே .... (ருஎ)

மாதவர்வேள்வி புரிந்தேவிடுத்த வரியரவு, போ தகம்வேங்கை மழுமான்முயலகன் பொங்கனலெ ன், றேருதரும்வெம்பகை வீறொழித்தேதன்னுரு வமைத்த, காதணிசங்கக் குழையான்சரணங் கரு துமினே...................................(ருஅ)

மின்னும்பவளமுஞ் செவ்வானும்வேணி மெய் யூர்தியுடன், றுன்னுங்கொடிவிடை யேந்தல்கபா லந்துடிசுடர்மான், டன்னுங்கொடுங்கதிர்ச் சூலா யுதம்படைமாதவற்கு, முன்னந்திகிரி யளித்தோ ன்முடித்ததுமுற்கங்கையே .... (ருகூ)

கங்கையும்வில்வமு மென்புமராவுங் கடுக்கையு ம்வெண், டிங்களுந்தும்பையு மாருமெருக்குந்திக ழறுகும், பங்கயனன்னத்துருவாகி நாடிப்பறந்த நிடா, வெங்கள்பிரான்பவளச் சடைமீதணிந்த்தர் பெற்றதே .... (சாய)

விநாயகன்பெருமை.

வெண்பா.

* தேயந்ததினிவளருஞ்செல்வப் புகழுநமெ ன் - றாய்ந்துமதிபொதியுமச்சடைபோற் - றேய் த்தநிறச், செந்துவர்மாமேனியெழிற் செல்வன் கழன்மலரில், வாதிறைஞ்சிமன்பொனுமவண்டு ()

வண்டார்மதப்பிரச வல்லிலங்கு கிம்புரிதூண்-
டண்டார்புழைச்சிந் துரத்தட்க்கைக் - துண்டக்,
கழைமருப்புச்செங்கட் கறையடிவெங்கோபக்-கு
ழைசெவிநால்வாய்க்குஞ்சரம் .... (௬௨)

முருகன்பெருமை.

சரவணத் துதித்தாறு தாயர்மகிழ் சண்முகனே
ர்-குரவனெனவீசற் குமார - னரிகுரவ, ரிந்திரற்கு
மாமருக னேந்தயிலோன் மாமயிலோன் - கந்த
ன்சேவற்றுவசன்காண்............ ....(௬௩)

காணுஞ்சசிமகளைக் கானவளைக் கைப்பற்றி..※
நாணவயனிந்திரனன் றூடுறவே - பூணு.... ....※
முரண்சூர்ச்செற்றக்கடம்பின் மொய்ம்பனடியார்
க்குக் - கருணைபெருகின்பக்கடல்............(௬௪)

திருமாலின்பெருமை.

நெடில்விருத்தம்.

கடலிற்றுயின்றுங் கடலடைத்தும் கடலைக்க
டைந்துங் கடல்சுவரக், கணையொன்றேவிக் கடற்
புவநங்கடந்துஞ்சரணொன்றாலளந்து, முடலைக்கு
றைத்தும்புவியிடந்துண்டுமிழ்ந்து முடலைச்சகடு
தைத்து, மூரிக்களிறோ டிணைமருத முனிந்தும்வி
ளவிற்கன்றெறிந்து, மடலுற்றெதிர்ந்து பொருங்
குருகினலகை யிடந்துங்கல்கவர்ந்து, மாயர்குல
த்தில்வந்துதித்து மசுரர்கிளையைவேரறுத்து, மிட

லுற்றலகை முலையருந்தியான் பாலிழுது வெண்ணெய்தயி, ரொடுத்தீர்ங்கருந்திப் பதினாறுயிரவர்குரவைகொண்டானே........................ ......(௬௫)

குரவைகுனித்து விளையாடிக் குன்றுகுடையாயெடுத்தொருகாற், கொண்டறடுத்துவேயூதிக்கோலிற்றுயின்று நிரையினமேய்த், தரவினடுத்துவருமுல்லையாயர் தலைவஞ்யமுநயினீ, ராடுஞ்சிறியகருஞ்சிருக்கனளிக்கமகவையந்தணர்க்காய், வினைவினழைக்கயமபுரம்போய்மீண்டகுருசிற்றிகிரியிறுல்வெயிலைமறைத்துவலம்புரிவாய்விட்டுமதமாவெங்கரவாற், பரவியழைக்கவந்தருளிப் பார்த்தன்றனக்குத்தேர்கடவிப்,பரிந்துபோற்றத்துகிலிழந்தபாஞ்சாலிக்குமளித்தானே.................(௬௬)

அளிக்குஞ்சிறுசே வுருவெடுத்து மரியமறையைமுன் கொணர்ந்து, மாமைபுருக்கொண்டடைகிடந்துமாதிவராக வுருவெடுத்துங், களித்துத்தூணின்மடங்க வுருக்காட்டிக் கநகனுடற் பிளந்துங், கடும்போர்வலிய மாவலியைக்காலினடக்கிப் புவிகவர்ந்தும், வளிக்குந்தொலையாமுதுமதுகை வாணன்புயமா யிரமறுத்தும், வஞ்சக்கஞ்சனுடல்செகுத்தும்வநம்போ யரசுதுறந்திருந்துங், குளிக்குஞ்சரத்தாற் றாடகையைக்கொன்றுமிகல் வாலியைக்கடிந்துங், கொடியசு தன்புயந் துணித்தக்

கொண்டனமுளங்குடிதங்கும்................(௬௭)

முடுகுவிருத்தம்.

தங்குந்திருமார்ப னயோத்தித் தலைவன்பலவீமன், றடவடமதுரைத் திருநகராளன் றனைமகள் சாநகிதன், கொங்கைத் துணைவன்றசரதராசகுமாரன் வசுதேவன், குலம்வருமுதல்வனந்தன்மைந்தன் சோதையசோதையிளஞ், சிங்கங்கோசலை செல்வன்றேவகிசிறுவன்சநகையர்கோன், றெய்வப்புது மணவாளன் பஞ்சவர்செல்வச்சிறுதூதன், பொங்குங்கடலிடையறிதுயில் கூரும்புருடன்சங்குசரம், பொருதண்டாழிவில் வாளுடனேந்தும் புநிதனை நினைவீரோ.................................(௬௮)

வெண்பா.

வீறுங்கொடியும் வியனூர்தியுங்கருடன்......*
கூறுமெழுத்தொட்டுடையான் கோபியர்மா - றே
றுகின்ற, ணையவன்பின்னைசத்ய வாமையுருக்கும
ணி- நேயன்திருத்தாணினை....................(௬௯)

பிரமன்பெருமை.

நினைக்கிலயனேறுநெடுங்கொடியுமன்ன - நனைக்
கமலந்தாரிருப்பா நாட்டுந்-தனிப்படையே, தண்
டமுன்னூலாரந் தவளமலர் வாணியவ - ளொண்
டொடியென்றுள்ளத்துணர் ....(௭௰)

இந்நூன்முறை.

உணரும்படியேயுரைத்தவற்றையெல்லா-மிணர்
மென்றொடையாமியல்பாற் - றனையெழுத்தாற்,
சொல்லாயச்சொல்லின் றொகுதிதனைத்தொடுக்க-
வல்லார்க்கணிபெறலாமால்.................(௭௧)

இரத்திநச்சுருக்கம்

முற்றிற்று.